தஞ்சாவூர் விற்பனைக்குழு தஞ்சாவூர் செயலாளர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை .திரு.இரா.சுரேஷ்பாபு, எம்.எ.,.,

ந.க.எண். ஆ/176/2019 நாள். 09.01.2020.

பொருள்: பணியமைப்பு - தஞ்சாவூர் விற்பனைக்குழு - இளநிலை உதவியாளர்கள் - பணியினை பணி வரன்முறை செய்து - உத்திரவிடல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண் 978 வேளாண்மை துறை, நாள் 23.05.1985
2. செயலாளர், தமிழ்நாடு அரசு தேர்வாணையம், , சென்னை-03 அவர்களின் கடித எண்1181/PSD-H1/19 நாள் 18.02.2019.
3. செயலாளர் , தஞ்சாவூர் விற்பனைக்குழு, அவர்களின் கடித எண் ஆ/176/2019 நாள் 28.02.2019,01.03.2019.

*******

ஆணை:

பார்வை (2)ல் காணும் கடிதத்தின்படி, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி - IVன் படி இளநிலை உதவியாளர்கள் தஞ்சாவூர் விற்பனைக்குழுவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (3) ல் காணும் இவ்வலுவலக உத்திரவின்படி, இளநிலை உதவிளாராக பணி நியமனம் செய்யப்பட்டுள்ள கீழ்காணும் பணியாளர்களின் பணியினை பார்வை (1)ல் காணும் அரசாணையின் அடிப்படையில் நியமன அலுவலர் என்ற முறையில் இளநிலை உதவியாளர் பதவியில் அவர்கள் பணியேற்ற நாள் முதல் பணி வரன்முறை செய்தும், தொடர் மூன்றாண்டு காலத்தில் இரண்டாண்டு பணிக்கால தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்திரவிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் பணிபுரியும் இடம் | பணியேற்ற நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | திருமதி.P.புவனேஸ்வரி. ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் பாபநாசம். | 28.02.2019 பி.ப | 28.02.2019 பி.ப |
| 2 | திருமதி.C.சுதா. ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் பட்டுக்கோட்டை.(மாற்றுப்பணி) தலைமையலுவலகம். | 01.03.2019 மு.ப | 01.03.2019 மு.ப |
| 3 | திரு.T.கவியரசு, ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் தஞ்சாவூர்.(மாற்றுப்பணி) தலைமையலுவலகம். | 01.03.2019 மு.ப | 01.03.2019 மு.ப |

மேற்காணும் பணியாளர்கள் தங்களது தகுதிகாண் பருவகாலத்தில் துறைதேர்வு, தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வு மற்றும் பவானிசாகர் அடிப்படைப்பயிற்சி தேர்வு ஆகியவற்றில் தவறாது தேர்ச்சி பெற வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.

செயலாளர்,
தஞ்சாவூர் விற்பனைக்குழு,
தஞ்சாவூர்.

பெறுதல்:
மேற்காணும் பணியாளர்கள்.
நகல்: 1 .விற்பனைக்கூடப் பொறுப்பாளர்கள் ,
ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்,
தஞ்சாவூர் , பாபநாசம் மற்றும் பட்டுக்கோட்டை

Scanned by CamScanner